## Darood Taj

Salawats and Salaams upon Allah's Last Messenger sallallahu alihi wa sallam We glorify Allah, and ask blessings and send salutations upon the Noble Messenger sallallahu alihi wa sallam , and praise and glorify Allah and believe in Him. All praise is due to Allah Whose Favours are the sole cause of the accomplishment of all good deeds and blessings upon the most exalted of His entire creation. He (The Last Messenger) sallallahu alihi wa sallam say: "I am the most exalted of all the children of Adam but I don't boast of it." May be the blessings upon his Descendents, upon his Companions, and upon his followers until the day of resurrection. AMEEN

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ صَاحِبِ التَّاجِ وَالْمِعْرَاجِ وَالْبُرَاقِ وَالْعَلَمِ دَافِعِ

الْبَلَاءِ وَالْوَبَاءِ وَالْقَحْطِ وَالْمَرَضِ وَالْاَلَمِ اِسْمُهُ مَكْتُوْبٌ مَرْفُوْعٌ مَشْفُوْعٌ مَنْقُوْشٌ

فِى اللَّوْحِ وَالْقَلَمِ سَيِّدِ الْعَرَبِ وَالْعَجَمِ جِسْمُهُ مُقَدَّسٌ مُعَطَّرٌ مُطَهَّرٌ مُنَوَّرٌ فِى

الْبَيْتِ وَالْحَرَمِ شَمْسِ الضُّحٰى بَدْرِ الدُّجٰى صَدْرِ الْعُلٰى نُوْرِ الْهُدٰي كَهْفِ

الْوَرٰي مِصْبَاحِ الظُّلَمِ جَمِيْلِ الشِّيَمِ شَفِيْعِ الْاُمَمِ صَاحِبِ الْجُوْدِ وَالْكَرَمِ وَاللّٰهُ

عَاصِمُهُ وَجِبْرِيْلُ خَادِمُهُ وَالْبُرَاقُ مَرْكَبُهُ وَالْمِعْرَاجُ سَفَرُهُ وَسِدْرَةُ الْمُنْتَهٰى

مَقَامُهُ وَقَابَ قَوْسَيْنِ مَطْلُوْبُهُ وَالْمَطْلُوْبُ مَقْصُوْدُهُ وَالْمَقْصُوْدُ مَوْجُوْدُهُ سَيِّدِ

الْمُرْسَلِيْنَ خَاتَمِ النَّبِيِّيْنَ شَفِيْعِ الْمُذْنِبِيْنَ اَنِيْسِ الْغَرِيْبِيْنَ رَحْمَةً لِّلْعَالَمِيْنَ

رَاحَةِ الْعَاشِقِيْنَ مُرَادَ الْمُشْتَاقِيْنَ شَمْسِ الْعَارِفِيْنَ سِرَاجِ السَّالِكِيْنَ

مِصْبَاحِ الْمُقَرَّبِيْنَ مُحِبِّ الْفُقَرَآءِ وَالْغُرَبَآءِ وَالْمَسَاكِيْنَ سَيِّدِ الثَّقَلَيْنِ نَبِيِّ

الْحَرَمَيْنِ اِمَامِ الْقِبْلَتَيْنِ وَسِيْلَتِنَا فِى الدَّارَيْنِ صَاحِبِ قَابَ قَوْسَيْنِ مَحْبُوْبِ

رَبِّ الْمَشْرِقَيْنِ وَالْمَغْرِبَيْنِ جَدِّ الْحَسَنِ وَالْحُسَيْنِ مَوْلٰنَا وَمَوْلَى الثَّقَلَيْنِ اَبِى
الْقَاسِمِ مُحَمَّدِ ابْنِ عَبْدِاللهِ نُوْرٍ مِّنْ نُوْرِ اللهِ يٰاَيُّهَا الْمُشْتَاقُوْنَ بِنُوْرِ جَمَالِهِ
صَلُّوْا عَلَيْهِ وَاٰلِهِ وَاَصْحَابِهِ وَسَلِّمُوْا تَسْلِيْمًا.

## தாஜுஸ் ஸலவாத்து

அல்லாஹும்ம ஸல்லி அலா செயிதினா வமௌhலானா முஹம்மதின் சாஹிபித்தாஜி வல் மி்ஃராஜி வல் புராக்கி வல் அலம். தா்ஃபிஇல் பலாஇ வல் வபாயி வல்கஹ்த்தி வல் மரளி வல் அலம். இஸ்முஹு மக்தூபுன் மர்்ஃபூவுன் மஷ்்ஃபூஉன் மன்கூஸுன் ்ஃபில் லவ்ஹி வல்கலம் செய்யிதில் அரபி வல் அஜமி ஜிஸ்முஹு முகத்தஸுன் முஅத்தருன் முதஹ்ஹருன் முனவ்வருன் ்ஃபில் பைத்தி வல்ஹரம்.

ஸம்ஸில்லுஹா பத்ரித்துஜா ஸத்ரில் உலா நூரில் ஹுதா கஹ்்ஃபில் வரா மிஸ்பாஹிள்ளுளம் ஜமீலிஸ் ஸியம் ஸ்ஃபீஇல் உமம் ஸாஹிபில் ஜூதி வல்கரமி வல்லாஹு ஆசிமுஹு வஜிப்ரீலு ஹா(H)திமுஹு வல் புராக்கு மர்கபுஹு வல்மி்ஃராஜு ஸ்ஃபருஹு வஸித்ரத்துல் முன்தஹா மகாமுஹு வகாப கவ்ஸைனி மத்லூபுஹு வல் மத்லூபு மக்ஸூதுஹு வல் மக்ஸூது மவ்ஜூதுஹு ஸய்யிதில் முர்ஸலீன் ஹா(H)த்தமுன் னபிய்யீன் ஷ்ஃபீஇல் முத்னிபீன் அனீஸில் ஙராயிபீன் ரஹ்மத்தன் லில்ஆலமீன் ராஹத்தில் ஆஸிக்கீன் முராதல் முஸ்தாக்கீன் ஷம்ஸில் ஆரி்ஃபீன் ஸிராஜிஸ்ஸாலிகீன் மிஸ்பாஹில் முகர்ரபீன் முஹிப்பில் ்ஃபுகராயி வல் மஷாகீன் ஸய்யிதி தக்கலைனி நபிய்யில் ஹரமைனி இமாமில் கிப்லதைனி வஸீலத்தினா ்ஃபித்தாரைனி ஸாஹிபி காப கவ்ஸைனி மஹ்பூபிரப்பில் மஸ்ரிகைனி வல் ம்ஃரிபைனி ஜத்தில் ஹஸனி வல் ஹுஸைனி மவ்லானா வமவ்லா தக்கலைனி அபில்காஸிமி முஹம்மதிப்னி அப்தில்லாஹி நூரின் மின் நூரில்லாஹி யாஅய்யுஹல் முஸ்தாக்கூன பிநூரி ஜமாலிஹி ஸல்லூ அலைஹி வஆலிஹி வஅஸ்ஹாபிஹி வஸல்லிமூ தஸ்லீமா.

**பயன்கள்.**

இந்த ஸலவாத்தை ஸலவாத்துக்களின் மணிமகுடம் எனக் கூறப்படுகின்றது. இந்த ஸலவாத்தை ஓதி வருவதால் ஏற்படும் நன்மைகள், பயன்கள் எண்ணிலடங்கா. இதை மனனம் செய்து நிரந்தரமாக ஓதி வருபவர் எம்பெருமானார் முஹம்மத்

ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் இதயங் குளிர்ந்த அன்பினைப் பெறுவார்.

செய்வினை, சூனியம், ஜின், ஷைத்தான் போன்றவைகளிலிருந்தும் காலரா, வைசூரி போன் தொத்து நோய்களிலிருந்தும் விடுதலை பெற இந்த ஸலவாத்தை 11 முறை ஓதித் தண்ணீல் ஊதிக் குடித்தால் அவர்கள் விரைவில் குணமடைவார். ஏழு நாட்கள் தொடர்ந்து இதனை 7 முறை ஓதி தண்ணீரில் ஊதிக் குடித்தால் கர்ப்பிணிப் பெண்களுக்கு சுகப்பிரவசம் உண்டாகும்.

நாம் நாடிய நாட்டங்களனைத்தும் அவை ஹலாலானதாக இருந்தால் அவற்றை நிறைவேற்றித் தர வேண்டுமென்று இந்த ஸலவாத்தை ஒளுவோடு 40 முறை ஓதி துஆ கேட்டால் வல்ல அல்லாஹ் நமது நியாயமான நாட்டங்களை விரைவில் நிறைவேற்றித் தருவான்.இந்த ஸலவாத்தை ஒருவர் தொடர்ந்து ஓதி வந்தால் அவர் பிறரின் பகைமை, பொறாமை, தொல்லை, துன்பம் போன்றவற்றிலிருந்து விடுதலைப் பெறுவார்.

**தாஜுஸ் ஸலவாத்து**

*(இசை: ஹஸ்பிரப்பீ என்ற மெட்டு)*

இறைவா! எங்கள் பெருமானார்

ஏந்தல் முஹம்மது நபிமீது

குறையா தோங்கும் ஸலவாத்தைக்

குன்றா தென்றும் சொரிந்தருள்வாய்!

மாண்புகழ் கொண்ட மெய்ஞ்ஞான

மணிமுடி சூட்டப் பெற்றோராம்

வான்புகழ் மிஃராஜ் புராக்குடனே

வானோர் கொடியும் பூண்டோராம்.

துன்பம், பிணிகள், கொள்ளை நோய்,

துயரம், பஞ்சம், பெருங்கவலை

என்பவை போக்கி எல்லோர்க்கும்

ஏற்றம் சேர்க்கு மருந்தவராம்.

அண்ணல் நபியின் திருப்பெயரோ

அருமறை களிலே உறைந்துள்ளதாம்

எண்ணும் லௌஹிலும் கலத்தினிலும்

ஏற்றி எழுதப் பட்டுள்ளதாம்.

அரபிக் அஜமிகள் யாவர்க்கும்

அவரே தலைவர், அவருடலம்

மரபுடன் தூய்தாம் க஻பாவில்

மாண்பார் சூழலில் ஒளிவீசும்.

காலையில் தோன்றும் பரிதியவர்

கங்குல் மிளிரும் முழுமதியாம்

ஞால மீதில் உயர்தலைவர்

நேர்வழி காட்டும் ஒளியாவார்.

படைப்புக் கெல்லாம் அடைக்கலமாம்

பகரும் இருளில் விளக்கொளியாம்

நடைமுறை இயல்புகள் அனைத்திலுமே

நலமார் எழிலைக் கொண்டோராம்.

நேர்வழி யாளர்க் கிறையின்பால்

நேரும் ஷபாஅத் செய்பவராம்

சீர்பொருள் அள்ளிக் கொடுப்பதிலே

சிறந்த வண்மை பூண்டோராம்.

மன்னான் அவரின் காவலனாம்

வானவர் ஜிப்ரீல் ஊழியராம்

மின்னேர் புராக்கே வாகனமாம்

மிஃராஜ் புனிதப் பயணமுமாம்.

முன்தஹா மரத்தின் தானத்தே

மொழியும் காப கவ்சைனில்

அந்தே னிறையைக் காண்பதுவே

அவரின் நாட்டம் குறிக்கோளாம்.

இறைதூ தர்க்கவர் அதிபதியாம்

இயல்நபி மார்க்கவர் முத்திரையாம்

கறையார் பாவம் புரிந்தோர்க்காய்

காவலன் பால் மிக வேண்டிடுவார்.

எளியோர்க் குதவும் எந்தலவர்

எவ்வுலக குக்கும் அருட்கொடையாம்

அளியோ டன்பு பூண்டோரின்

அகத்தில் அமைதி பொழிவோராம்.

காணும் ஆவல் பூண்டோர்க்குக்

கனியும் நாட்டம் ஆனவராம்

பேணும் ஆத்ம ஞானியர்க்குப்

பெருஞ்சுட ரான பகலவனாம்.

வழிச்செல் வோர்க்கவர் சுடராவார்

வல்லோன் இறையின் அருகிருக்க

விழைவோர் தமக்கு விளக்காவார்



www.sufimanzil.org

வறியோர் எளியோர்க் கருள்நேயர்.

பேரிறை பக்தர்க் கவர்தலைவர்

புனிதத் தலங்களின் நபியுமவாட

ஏரிரு கிப்லா இரண்டினிமாம்

ஈருல கில்நம் காப்பாளர்.

சீரிய காப கவ்ஸைனின்

சிறப்புக் குரிய தோழரவர்

பாரின் இருகீழ் மேற்குகளைப்

படைத்துக் காப்போன் நேயரவர்.

மன்னும் ஹஸனுசைன் திருப்பாட்டார்

மனுஜின் இறையின் ஒளியாவார்

முகமதில் இலங்கும் பேரொளியை

முனைந்து காண விழைவோரே!

அண்ணல் மீதும் அவர்கிளைஞர்

அருமைத் தோழர் மீதெல்லாம்

வண்ணம் செறியும் ஸலாத்துஸலாம்

வாயே கமழ மொழிந்திடுவோம்.